83

தியாக விக்கிரகம்

ஜோத்பாய் மஞ்சத்தில் குப்புறப் படுத்தவள் எழுந்திருக்கவில்லை. தாதி கொண்டுவந்து வைத்த அன்ன பானங்கள் அப்படியே இருந்தன.

நிலவு பட்டப்பகல்போலக் காய்ந்து கொண்டிருந்தது. அறையின் பெரிய ஜன்னல் வழியாக நிலா உள்ளேயும் பால் கொட்டினதுபோலத் தரையில் விழுந்திருந்தது. வெண்மையான படுக்கையின்மேல் ஜோத்பாய் ஒரு துவண்ட புஷ்பம்போலக் குவிந்து கிடந்தாள். அறையின் அகண்ட விளக்குகளின் வெளிச்சம் அவளுடைய புடவையின் ஜிகினாவில் பட்டு மின்னிக்கொண்டிருந்தது. அவள் மூச்சுவிட்டபோது புடவை அசங்கியதால் பிரதிபலிப்பு மங்கியும் ஓங்கியும் தெரிந்தது.

மான்சிங் மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். உள்ளே நுழைந்ததும் கதவை ஜாக்கிரதையாக மூடிவிட்டு மஞ்சத்தில் மெய்ம்மறந்து கிடந்த சகோதரியைச் சற்று நேரம் மௌனமாகக் கவனித்தான். பிறகு தலைகுனிந்த வண்ணம் அறையில் மேலும் கீழுமாக உலாத்தினான்.

சகோதர வாஞ்சையும் கடமையும் அவன் மனதில் கைகலந்து கொண்டிருந்தன. மிகுந்த மனோ திடத்துடன் கடமையைக் கடைப் பிடித்தான். சகோதரியின் சுகத்திற்காகவும் அவள் கஷ்டப்படக்கூடாது என்ற தன் மனோபீஷ்டத்திற்காகவும், தான் அவசியம் என்று கருதிய பாதையைக் கைவிட்டுவிடக் கூடாது என்று முடிவிற்கு வந்துவிட்டான்.

அவன் கடமையென்று எண்ணின காரியம், அவன் காலத்து முக்கிய மான தேசீயப் பிரச்சினையை ஒட்டியது.

ராஜபுத்திர குலம் வெறும் வீரத்தைக் காட்டி, மொகலாய வாளின் கீழ் வீழ்ந்து மடிந்து நசித்துப்போவதா? அல்லது, ராஜ தந்திர முறை யில் நடந்துகொண்டு கால பலத்தை அனுசரித்து, அதன் வெள்ளப் போக்கில் கொஞ்சதூரம் சென்று பிறகு கரையேறுவதா? இதுதான் அக்பர்பாதுஷாவின் காலத்தில் ராஜபுத்திரர்கள் முன் நின்ற பிரச்சினை.

1943.

அக்பர் வம்சம் ராஜபுதனத்தின் கௌரவ சிகரங்களில் ஒன்று. மான்சிங் அந்த வீரகுலத்தில் உதித்தவன். சுத்த வீரன்; ஆனால் ராஜ தந்திரி. டில்லியில் சாம்ராஜ்யாதிபதியாக இருந்த அக்பர் பாதுஷாவின் செல்வாக்கையும் பலத்தையும் திறமையையும் நன்றாய் மதிப்பிட்டு அறிந்தவன். அக்பரைச் சில ஆயிரம் ராஜபுத்திரர்கள் எதிர்த்து வெற்றிபெறுவதென்பது நடக்கக்கூடாத காரியம். ஆகையால் அவர்கள் அந்த சமயம் வீரத்தை முன்னிட்டு மாயாமல், சமரஸமாக, நிலைமையைச் சமாளித்துப் பிறகு தலையெடுக்க முயலவேண்டு மென்பது மான்சிங்கின் கருத்து.

மேலும் முற்போக்கையும் எதிர்காலத்து க்ஷேமத்தையும் உத்தேசித்து அடிக்கடி சில சமூக மாறுதல்களையும் காலத்திற்கேற்ற புதுப்பழக்கங்களையும் கட்டாயமாக அனுசரிக்க வேண்டுமென்பது அவன் கொள்கை. அவன் யோசித்து யோசித்துப் பார்த்ததில் வேறு வழி ஒன்றுமே அவனுக்குப் புலப்படவில்லை. மொகலாயருடன் ராஜபுத்திரர்கள் ராஜி செய்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம் என்றுதான் அவனுக்குப் பட்டது. ராஜபுதனத்தின் சரித்திரத்தில் – ஏன் ஹிந்துஸ்தானத்தின் சரித்திரத்திலேயே, அந்த சமயம் ஒரு மகத்தான சோதனைக்காலம் என்று அவனுக்குத் தோன்றியது.

சித்தூர் வம்சத்தின் வீர ராணாவான பிரதாபசிங் இதற்கு நேர் எதிரிடையான மனப்பான்மை கொண்டிருந்தார். ராஜபுத்திர குலம் அன்றே அழிந்தாலும் சரி, மானத்தை விட்டுக் கொடுக்கக்கூடாதென்பது அவருடைய தீர்மானமான கொள்கை. அன்னியனுடன் சமாதானம் செய்துகொண்டு பழகுவது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகி வேலை என்பது அவரது சித்தாந்தம்.ராஜபுத்திரன் என்றும் தூய்மை ரத்தம் கொண்டவனாக இருக்கவேண்டும். சலிப்படைந்து வாழ்வதைக் காட்டிலும் சாவது மேல் என்று திட மனதுடன் அக்பரை எதிர்த்து நின்று போராடினார்.

மான்சிங் அப்படி எண்ணவில்லை யென்று பிரதாபசிங் அவனிடம் தீராப் பகைமை யுணர்ச்சி கொண்டார்.

மான்சிங் மெதுவாகத் தங்கையின் அருகில் சென்று அவள் தலை மயிரை மெள்ளத் தடவினான். ஜோத்பாய் உலுக்கி விழுந்தாள். திடீரென்று படுக்கையைவிட்டு எழுந்து உட்கார்ந்தாள். அவளுடைய வகிடு கலைந்து முகம் வெடித்ததுபோல் இருந்தது. நெற்றிக் குங்குமம் அழிந்து போய் சோபைய'ற்றுப் போயிருந்தாள். சற்று குலைவுற்ற ஆடையைக்கூட அவள் சரிப்படுத்திக்கொள்ள மறந்தாள். கண்களில் ஒரு பயந்த பார்வையும் நிலைகாணக்கூடாத சோகமும் இருந்தன.

'அண்ணா, அண்ணா, என்னைக் கொன்றுவிடு. உனக்குத் தங்கை இல்லையென்று நினைத்துக்கொள்!' என்று சொல்லி விம்மினாள்.

'கண்மணி, உன்னை நான் எவ்வளவு சிரமப்பட்டுப் படிக்கவைத்தேன்?

உன்னை எல்லாம் தெரிந்தவளாக்கினேன்–என் சிரமமெல்லாம் வீணா?' என்று மான்சிங் சொன்னபொழுது அவனுடைய வீரக்குரலே கம்மிப் போய்விட்டது.

'எதற்காகச் சொல்லிக் கொடுத்தாய்? நீ சொல்லுவதையெல்லாம் நான் செய்யவேண்டும் என்பதற்காகவா?' என்று ஜோத்பாய் குறுக்கிட்டுக் கேட்டாள்.

'நான் சொல்லுவதை யெல்லாம் நீ எனக்காகச் செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லையம்மா! தேசத்திற்காகச் செய்! வருங்காலத்தை உத்தேசித்துச் செய்! நீ புத்திசாலி, ஆலோசனை செய்து பார்க்கத்தான் உனக்கு அவகாசம் கொடுத்திருக்கிறேனே! எனக்காகக் கட்டாயமாக நீ ஒன்றும் செய்யவேண்டாம். அது பிரயோஜனமுமில்லை. ஆனால் நான் ஒன்றுமட்டும் உனக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் சொல்லுவது என்னுடைய சுயநலத்தை உத்தேசித்து அன்று என்பது உனக்கே தெரியலாம். பவானி முன்பு ஆணையிட்டுக் கூறுகிறேன்!' என்று மான்சிங் விர்ரென்று அறையின் ஒரு பக்கத்துச் சுவரில் தொங்கவிடப் பட்டிருந்த பெரிய சித்திரத்தின் அடியில் போய் மண்டியிட்டுக்கொண்டு கைகூப்பினான். அது ராஜபுத்திரர்களின் குல தேவதையான பவானியின் படம். அவள் துர்க்கை அவசரத்தில் திரிசூலம் கையில் ஏந்தி நின்றாள். பக்கத்தில் அவள் வாகனமாகிய சிம்ஹம் படுத்திருந்தது.

ஜோத்பாயும் ஒருதரம் பவானியைத் தலை தூக்கிப் பார்த்தாள். 'பின் எதற்காக என்னை உயிருடன் மொகலாயனுக்குப் பலியிட உத்தேசிக் கிறாய்? என்று நீர் நிறைந்த கண்களை அவன் பக்கம் திருப்பிக் கேட்டாள். அவள் தோற்றத்தில் வேட்டையாடப்பட்ட ஒரு மிருகத்தின் மிரட்சியும் பீதியும் இருந்தன.

மான்சிங் எழுந்து நின்றான்.

'ஜோத்பாய்! நமது சரித்திரத்தின் இந்த நெருக்கடியான நிலையில், 'நான்' 'நீ' என்ற எண்ணமே உண்மையான ராஜபுத்திரர்களிடையே உதிக்கக்கூடாது. நீ சொல்லுவதுபோல நான் உன்னை பலியிடத் துணிந்தேனானால் எப்பேர்ப்பட்ட மனத்துடிப்புடன் அதை நான் செய்யப் புகுவேன் என்பது உனக்குத் தெரியாதா?'

'ஆகையால்தான் நான் சொல்லுகிறேன், அண்ணா! நீ என்னை உன் உயிரைவிட அதிகமாக மதிக்கிறாய் என்று எனக்குத் தெரியும். ஆகையால் – மான்! – உன் கையாலேயே, என்னைக் கிளிபோல வளர்த்து, உன் கையாலேயே என்னை மொகலாய மன்னனிடம் கொடுத்து, அவன் என்னைத் தொட்டுக் கொல்லுவதைப் பார்த்து நீ மனம் உடையக்கூடாது! நீ அந்த விபத்தைத் தாங்கமாட்டாய். இந்தா, உன் கைவாளாலேயே என்னைக் கொலைசெய்து மன அமைதிகொள்!' என்று அவள் கைநீட்டி மான் சிங்கின் இடையில் தொங்கிய வாளை

உருவி அவன் கையில் கொடுத்தாள். அவன் அதை உயிரற்ற கையில் வாங்கிக் கொண்டான்.

'ஜோத்பாய்! என் கருத்தை, இந்த விஷயத்தில், உன்னால் அறிய முடியவில்லையா?' என்று இரங்கிக் கேட்டான்.

'என்ன கருத்து? குலமானத்தைக் குலைப்பது ஒரு கருத்தா? ஐயோ! உனக்கேன் இந்தப் புத்தி வந்தது? பிரதாப்சிங்! அவனுடன் நான் பிறந்திருக்கலாகாதா? ஆ! மான்சிங்! இல்லை, இல்லை. உன்னுடன் பிறந்ததுதான் என் பாக்கியம்! ஆனால், உன் தங்கையின் வாழ்க்கையை இப்படிச் சிதைக்க நீ எப்படித் துணிந்தாய்?' என்று ஜோத்பாய் மான்சிங்கின் தோளில் கைவைத்துக் கேட்டாள்.

மான்சிங் ஜன்னல் வழியாக தூரத்து வெளியைப் பார்த்துக்கொண்டு கம்பீரமாகப் பேசலானான்.

'தேசத்தைக் காக்கும் பெரிய காரியத்தில் தனி மனிதர்களின் சுக துக்கங்களைப்பற்றி எண்ணுவதற்கே இடமில்லை – சாவகாசம் கிடையாது! மொகலாயர் ஹிந்து ஸ்தானத்தில் வேரோடி விட்டார்கள்.' இனிமேல் அவர்களை இங்கிருந்து யாராலும் பெயர்க்க முடியாது. அவர்களுடைய ஆதிக்கம் நாளுக்கு நாள் பெருத்து விரிந்து வருகிறது. நம் கண்முன்னேயே சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து விட்டார்கள். இனி, ஹிந்து மன்னர்கள் தனியாக எதிர்த்து நின்று போராடுவது பயனற்ற காரியம். இன்றே நாம் நிலைமையை உணர்ந்து அவர்களை இந்த தேசத்து மக்களாக ஏற்று அவர்களுடன் கலந்துகொண்டால் ஹிந்து மதம் நிலைக்கும்–ஹிந்துஸ்தானம் சீர்பெறும்.'

'நான் மொகலாயனுக்கு வாழ்க்கைப்படுவதனாலா?'

'உன் மகன் சாம்ராஜ்யாதிபதி ஆவான்!'

ஜோத்பாய் காதுகளைப் பொத்திகொண்டாள். அடிபட்ட பட்சி போலக் கத்தினாள்.

'மான்சிங், மான்சிங்! நான் ஒரு நாளும் அக்பரின் மனைவியாக மாட்டேன்!'

'அக்பரின் மைத்துனனாக வேண்டுமென்று நான் தான் ஏங்கித் திரிகிறேன் என்று நினைக்கிறாயா?' என்று மான்சிங் சிறிது கடுகடுப்புடன் கேட்டான். அவன் கண்கள் ஒரு நிமிஷம் ஜொலித்தன. மறு நிமிஷம் அவன் சடக்கென்று உணர்ச்சி வேகத்தை அடக்கி மறைத்துக் கொண்டான். மறுபடியும் சாவதானமாகப் பேசினான்.

'ஜோத்பாய்! இன்று ராஜபுத்திரர்களுக்கு வேறு வழியே கிடையாது! போனதைப் பற்றியும் நமது புராதனத் தூய்மையைப்பற்றியும் வீரத்தைப் பற்றியும் நினைத்து என்ன பயன்? பிரயோஜனமில்லை!... ஒரு சிலர் தங்கள் சுகத்தையும், உயிரையும், – மானத்தையும் கூட – தியாகம் செய்ய இப்பொழுது முன் வரவேண்டும் – உடனே! இல்லாவிட்டால் ஹிந்து

நாகரிகம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.'

'அதற்கு நான்தானா அகப்பட்டேன் பலியாக?'

'எல்லோரும் அப்படிச் சொல்லி விட்டால்? மேலும், – இப்பொழுது ராஜஸ்தானத்தில் அப்பேர்ப்பட்ட தியாகத்திற்கு வேறு யாரும் அருகரில்லை! உன்னுடைய இணையற்ற கல்வி, அறிவு, அழகு –'

ஜோத்பாய் தலையிலடித்துக் கொண்டாள்.

'என் பாழும் அழகும் கல்வியும் அறிவும்–நான் என் செல்வமாகக் கருதிய இவையா எனக்குத் துரோகிகளாக வந்து மூளவேண்டும்?'

'சிறு நோக்குக் கூடாது. முன்னே இருப்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். உன் ஒப்பற்ற குணங்கள் ஒரு சாம்ராஜ்யத்தின் பிற்காலத் திற்கு இன்றியமையாத உதவியாக இருக்குமானால், இந்த சமயத்தில் தனி வாழ்வின் அற்ப சுகங்களைப்பற்றி நினைக்கலாமா? அது குற்ற மல்லவா?'

'எது அற்ப சுகம்?'

மான்சிங் பதில் சொல்லவில்லை, சற்றுநேரம் கழித்து மறுபடியும் பேசலானான்.

'ஜோத்பாய்! ஹிந்துஸ்தானத்தையே ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்துவிட்ட அக்பர் சக்கரவர்த்திக்கு நீ மகிஷியாகவும் நான் பிரதம தளகர்த்தனாகவும் இருந்தால் நாட்டிற்கு எவ்வளவு நலம் ஏற்படலாம் என்பதை யோசித்துப்பார்!'

'நாமென்ன ஆவது? உன் வீரம் என்ன ஆவது? என் மானம் என்ன ஆவது?'

'இவைகளுக்கெல்லாம் காலதேச வர்த்தமானங்களை ஒட்டித்தான் மதிப்பு. ஒரு சமயத்து வீரம் மற்றோர் சமயம் மடமையாகலாம். சாதாரணமாக மானக்குறைவு என்று கருதிச் செய்யும் காரியம் ஒரு அசாதாரணமான நிலைமையில் மகா உத்கிருஷ்டமானதாகவும் மாறலாம் – அவசியமாகலாம்!'

'அவசியமானால் சரியாகுமா?'

'ஜோத்பாய்! இது யுகம் யுகமாக கேட்கப்படும் கேள்வி. ஒவ்வொரு மகா நெருக்கடி காலத்திலும், சரித்திரத்தில், ஒவ்வொரு விதமான பதில் அளிக்கப்பட்டிருக்கிறது... சரி, தப்பு என்பவைகளுக்கு சந்தர்ப்பத்தை ஒட்டாத ஒரு அர்த்தம் எப்பொழுதாவது இருக்கிறதா?'

'அண்ணா! நீ சொல்லுவதெல்லாம் தப்பு என்று எனக்குத் தோன்று கிறது. ஆனால் எனக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.

'பதில் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? நீ அக்பரை மணப்பதில் என்ன தப்பு?'

'அவர் மிலேச்சன்!'

'அக்பர் சுத்த வீரன். மொகலாயர் ஆரிய வம்சத்தின் ஒரு பிரிவினர்

தான்!'

'அவர் மகம்மதியர்!'

'மதப்பித்து கொண்டவர் அன்று. விரிந்த நோக்குடையவர். நாமிருவரும் அவரைக் கொண்டு ஹிந்து ஸ்தானத்தை உயிர்ப்பிக்கலாம். இந்நாட்டில் புதியதோர் வீரம் தோன்றும்!'

'ராஜபுத்திர வீரம்?'

'ராஜபுத்திர வீரம் இனிமேல் தனிக்கங்கையாகப் போகமுடியாது. யமுனையாகிய மொகலாய வீரத்துடன் கலந்துதான் சொல்லவேண்டும்!'

'அது சாவன்றோ?'

'சாவன்று! நவஜீவனம்!'

'அண்ணா! ஜன்மமெடுத்ததற்கு நான் இந்த உயிரில் கொஞ்சம் ஆறுதல் கொள்ளவேண்டாமா? ஆயுள்பரியந்தம் என் மனதிற்குப் பிடிக்காத ஒரு நிலையில் தவிக்க முடியுமா?'

'அக்பர் உன் மனதைக் கவர்ந்து விடுவார். எனக்கு அது நிச்சயமாகத் தெரியும்!'

'நாம் அவரது மனதைக் கவரத்தவறினால்?'

'கவர்ந்து விட்டோம் ஏற்கனவே! நான் நாளைமுதல் அக்பரின் பிரதம தளகர்த்தன்! அவர் என் மூலமாக மிகுந்த ஆவலுடன் அவர் இஷ்டத்தை உனக்குச் சொல்லியனுப்பியிருக்கிறார். சரிதானே?'

'மான்சிங்! எனக்கு ஒன்றும் தெரியவில்லை. என் கண்களைக் கட்டிவிட்டு என்னை எங்கோ அழைத்துச் செல்கிறாய். நான் என்ன செய்யட்டும்?'

அவள் தவிப்பைக்கண்டு மான்சிங்கின் மனம் இளகிற்று. அவள் தலையைத் தொட்டு 'கண்மணி! நான் உனக்குக் கெடுதல் செய்வேனா? உன்னைத் தோளில் சுமந்து வளர்த்த நான்–என் சிறந்த சிற்பமாகிய உன்னை–'

பழைய நினைவுகள் இருவர் மனதிலும் ஒரே சமயத்தில் பாய்ந்தன. சிறு குழந்தைகளாக இருவரும் ஓடியாடிய பருவமும் பிறகு சிறுவன் சிறுமிகளாக ஆகாசக் கோட்டைகள் கட்டி ஆனந்தமடைந்ததும் சித்திரக் காட்சி போல மனத்தின்முன் தோன்றின.

'அண்ணா! நீ சொல்லுகிறபடி கேட்கிறேன் – என்றும் போல இன்றும்! நீ சரியானதைத்தான் சொல்லுவாய். அக்பருக்கு என்ன சொல்லியனுப்ப வேண்டுமோ அதை உடனே சொல்லியனுப்பிவிடு!' என்று ஜோத்பாய் சாவதானமாகச் சொன்னாள். ஆனால் அவள் முகத்தில் மாறுதலோ அல்லது அமைதியின் அடையாளமோ தென்படவில்லை.

ஜோத்பாய் இப்படி திடீரென்று தன் யோசனையை அங்கீகரித்தது மான்சிங்கிற்குக் கலவரத்தை உண்டாக்கிவிட்டது.

'க்ஷத்திரியர்களுக்கு யுகதர்மத்தை அனுசரிக்க வேண்டிய கண்டிப்பு

இருக்கிறது. அவர்களால்தான் தேசம் நிலைகொள்ளுகிறது. மற்ற ஜாதி களுக்குக்கூட அவ்வளவு கண்டிப்பு கிடையாது. அது கடமை. சமரஸமும் யுத்தத்தில் ஒரு முறை. அது இப்பொழுது மிகவும் அவசியம்–'

'மான்சிங்! இதெல்லாம் எனக்கு எதற்கு? நீ என் குரு. உன் வார்த்தை எனக்கு சத்தியம். அது போதும்.'

'நிஜமாகவா சொல்லுகிறாய், ஜோத்பாய்?' என்று மான்சிங் ஆச்சரியத் துடன் கேட்டான்.

'சத்தியமாக!' என்று சொல்லிக் கொண்டு ஜோத்பாய் எழுந்து நின்றாள். அவள் முகம் ஜொலித்தது.

'மான்! உனக்காக நான் எது வேண்டுமானாலும் செய்கிறேன்! நான் அக்பரின் மனைவியாகிறேன்!'

'எனக்காக அன்று, ஜோத்பாய்! *ஹிந்துஸ்தானத்திற்காக!*'

ஜோத்பாய் மௌனமாக மான்சிங்கின் காலடியில் மண்டியிட்டு அவன் கால்களைக் கட்டிக்கொண்டாள்.

மான்சிங் அவள் சிரத்தைத் தொட்டுக்கொண்டே பவானியின் உருவத்தைப் பார்த்தான்.

'அம்மா! சரித்திரத்தில் நீ அழியாத தியாக விக்ரகமாக விளங்குவாய்!' என்று சொல்லி மலமல வென்று கண்ணீர் உதிர்த்தான்.

●